## செயலி, வலைப்பக்கம் - மே 2018

### உமாங் செயலி

- உமாங் செயலி மூலம் ஓய்வூதிய கணக்கு புத்தகத்தை பார்க்கும் சேவை, ஓய்வூதியதாரர்கள் உமாங் செயலி மூலம் "ஓய்வூதிய கணக்கு புத்தகத்தைக் காட்டுக" எனும் சேவையை ஈ.பி.எஃப்.ஓ. அறிமுகம் செய்துள்ளது.

### ஸ்குரோல் யாஹூ

- யாஹூ தனது சொந்த புதிய க்ரூப் சாட் ஆப் ஆன ஸ்குரில் யாஹூ பயன்பாட்டை வெளியிடுவதன் மூலம் , மிகப்பெரிய போட்டி ச் சந்தையில் நுழைந்துள்ளது.

### இ-தாக்கல்போர்ட்டலில் இல் ITR-4 தொடங்கப்பட்டது

- வருமான வரித் துறை அதிகாரப்பூர்வ இ -தாக்கல் போர்ட்டலில் 2018-19 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டிற்கான மூன்றாவது வருமானம் படிவமான ITR-4 ஐ அறிமுகப்படுத்தியது.

### அறிவுசார் சொத்து சின்னம் - ஐ பி நானி-யை சுரேஷ் பிரபு வெளியிட்டார்

- மத்திய வர்த்தகத் தொழில்துறை அமைச்சர் திரு .சுரேஷ் பிரபு புதுதில்லியில் தேசிய அறிவுசார் சொத்துரிமை கொள்கை மாநாட்டில் சொத்துரிமைச் சின்னம் - ஐபி நானி-யை வெளியிட்டார். கணினி திருட்டு தொடர்பான திரு அமிதாப்பச்சன் பங்கேற்ற வீடியோ படத்தையும் இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் வெளியிட்டார்.

### மை எம்.பி. ரோஜ்கார் போர்ட்டல்

- போபால் நகரில் இளைஞர்களுக்கான வேலைகளை வழங்குவதற்காக பஹால் திட்டத்தின் ஒரு பகுதியாக மத்தியப் பிரதேச அரசாங்கம் மை எம் .பி. ரோஜ்கார் போர்ட்டலை தொடங்கியுள்ளது.

**“ப்ராப்தி” செயலி மற்றும் இணையம்**

- மத்திய மின்சாரத் துறை இணையமைச்சர் (தனப்பொறுப்பு) திரு. ஆர்.கே. சிங் “ப்ராப்தி” எனப்படும் கைபேசி செயலியையும் இணையத்தையும் தொடங்கிவைத்தார். ( கட்டணத் திருத்தம் , ஜெனரேட்டர் விலைப் பட்டியலில் வெளிப்படைத் தன்மைக்கான ஆய்வு - PRAAPTI) என்ற இந்தச் செ யலியை மின் உற்பத்தி, விநியோக நிறுவனங்களிடையே வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்த உருவாக்கப்பட்டுள்ளது.

**ரயில்வே துறை மின்-பயணச் சீட்டு முறைக்கு புதிய பயனர் இடைமுகம் அறிமுகம்**

- ரயில்வே பயணிகளுக்கு உதவும் வகையில் இணையத்தில் புதிய வடிவில் பயனர் இடைமுகம் (User Interface) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது .தகவல் தொழில்நுட்பத் துறையின் பரிந்துரைப்படி ரயில்வே அமைச்சர் திரு . பியுஷ் கோயலின் தொலைநோக்குப் பார்வையில் புதிய பயனர் இடைமுகம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது ரயில்வேயின் irctc.co.in என்ற இணையதளத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது பயனாளிகள் எளிதில் கையாண்டு பயன்பெற வசதியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**சமக்ரா போர்டல்**

- மே 31, 2018 ஆம் ஆண்டு பள்ளிக்கல்வி ஆசிரியர்களுக்கான கேரளா இன்ஃப்ராஸ்ட்ரக்சர் அண்ட் டெக்னாலஜி ஃபார் எஜுகேஷன் (KITE) தயாரித்த கல்வி வள போர்டல் சமக்ராவை முதல்வர் பினராயி விஜயன் துவங்குவார்.